செ.வெ.எண் : 37 / ஜூலை நாள் : 18.07.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வருகின்ற 21.07.2017 அன்று நடைபெறவுள்ளது.

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஜுலை 2017 மாதத்திற்கான விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் 21.07.2017 வெள்ளிக்கிழமை அன்று முற்பகல் 11.30 மணியளவில் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள ஊராட்சி மன்றக் கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது. விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகளும் விவசாய சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு விவசாயம் சம்பந்தப்பட்ட பொருள்களை விவாதிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

விவசாயம் சம்பந்தமான கோரிக்கைகள் மட்டுமே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர், முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**